உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி - 5

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு ஜுன் மாதம் 10-ம் நாள் (10-06-2009) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு 08-06-2009 தேதியிட்ட அழைப்பிதழிற்கிணங்க உழவர்கரை நகரமன்ற 21-வது இயல்பு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட

## தீர்மானம் எண் - 1535

| நகராட்சி சாலைகளில் பள்ளம் வெட்டுவதற்கு, கட்டுமான பொருட்கள் வைத்துக்கொள்ள, மற்றவைகளுக்கு திருத்திய கட்டணம் நிர்ணயித்தல் - தொடர்பாக. |
|---|

உழவர்கரை நகராட்சி சாலைகளில் தனி நபர்கள் மற்றும் இதர துறைகள் குழாய், கேபிள் போன்றவற்றை போடுவதற்காகவும், கட்டுமான பொருட்கள் வைத்துக் கொள்ளவும், தற்காலிக பந்தல் அமைத்துக்கொள்ளவும் அரசு ஆணை எண்:419 dt.29-08-1997ன்படி கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது. இக்கட்டணங்களை இதுவரை பல விலையேற்றத்தின் போதும் உயர்த்தி அமைக்கப்படவில்லை. எனவே தற்போது நடைமுறையில் இருக்கும் விலைகளுக்கு ஏற்ப மேற்கண்ட கட்டணங்களை இணைப்பு அட்டவணையில் உள்ளது போல் மாற்றியமைத்து வரும் ஜுலை மாதம் 1ம் தேதி முதல் நடைமுறைக்கு கொண்டு வர நகரமன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

தலைவர்
உழவர்கரை நகராட்சி

NSJ.ஜெயபால் (எ) அய்யனார்
தலைவர்
உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5.

பிற்சேர்க்கை அட்டவணை I.

| | | | |
|---|---|---|---|
| I | நகராட்சி சாலைகளில் பள்ளம் வெட்டுவதற்கான சீராக்கக்கட்டணம். | கட்டணத்தொகை நடைமுறையில் உள்ளது | கட்டணத்தொகை புதியது |
| | 1. மண்சாலை (Earthern Road) | ரூ.22/ச.மீ | ரூ.145/ச.மீ |
| | 2. கருங்கல் ஜல்லி சாலை (WBM Road) | ரூ.110/ச.மீ | ரூ.240/ச.மீ |
| | 3. தார் சாலை (BT Road) | ரூ.270/ச.மீ | ரூ.375/ச.மீ |
| | 4. சிமெண்ட் சாலை (CC Road) | ரூ.460/ச.மீ | ரூ.800/ச.மீ |
| | 5. ‘ட’ வடிவ வாய்க்கால் (‘L’ drain) | - | ரூ.295/மீ நீளம் |
| II | **தற்காலிக பந்தல் அமைத்துக் கொள்வதற்கான கட்டணங்கள்** | | |
| | 1.தட்டை பந்தல் | ரூ.7.50/ச.மீ (தரைப்பகுதி) ஒரு நாளைக்கு | ரூ.15/ச.மீ (தரைப்பகுதி) ஒரு நாளைக்கு |
| | 2.கொட்டகை பந்தல், ஷாமியானா | ரூ.10/ச.மீ (தரைப்பகுதி) ஒரு நாளைக்கு | ரூ.20/ச.மீ (தரைப்பகுதி) ஒரு நாளைக்கு |
| | 3.பந்தல் போடுவதற்கு குழி அமைத்தல் | ரூ.75 ஒரு குழிக்கு, ஒரு வாரத்திற்கு | ரூ.150 ஒரு குழிக்கு, ஒரு வாரத்திற்கு |
| III | **சாலைகளில் கட்டுமான பொருட்கள் வைப்பதற்கு** | ரூ.15/ச.மீ/ஒரு நாளைக்கு | ரூ.20/ச.மீ/ஒரு நாளைக்கு |

NSJ.ஜெயபால் (எ) அய்யனார்
தலைவர்
உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5